# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 180 | சனிக்கிழமை Saturday | 26.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ஊழல் செய்த கூட்டத்தை விடமாட்டேன்



## மதுராந்தகத்தில் முதலமைச்சர் விஜய் பேச்சு

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் முதல்- அமைச்சரும், தமிழக வெற்றி கழகத்தின் தலைவருமான விஜய்,தனது கட்சியின் வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து மதுராந்தகத்தில் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் மதுராந்தகம் தொகுதி மக்கள் அனைவருக்கும் வணக்கம். என்னுடைய சொந்தங்களே! உங்கள் எல்லாரையும் சந்தித்ததில் ரொம்ப ரொம்ப சந்தோஷம்.நான் இன்று முதல்-அமைச்சராக வரவில்லை. இடைத்தேர்தலுக்காக ஓட்டு கேட்டு வந்திருக்கிறோம். எப்போதும் போல உங்கள் வீட்டு பிள்ளையாக,மகனாக,அண்ணனாக,தம்பியாக வந்திருக்கிறேன்.

உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும். ஏன் உங்கள் விஜய் ஆட்சிக்கு வரக்கூடாதா? தவெக ஆட்சிக்கு வரக்கூடாதா? ஒரு தனிக்கட்சியாக, சாமானியர்களின் கட்சியாக, பெண்கள், இளைஞர்கள்,குடும்பங்கள் பேராதரவோடு, ஊழல், லஞ்சத்தை ஒழிக்க விஜய் ஆட்சிக்கு வரக்கூடாதா? ஏன் தீயசக்தி திமுக தினந்தோறும் தவெக குறித்து அவதூறாக, அசிங்கமாக, ஆபாசமாக பேசி வருகிறது?

நான் சினிமாவில் ஜெயிச்சதுக்கும், இன்று அரசியலில் ஜெயிச்சதுக்கும் தமிழ்நாட்டு உறவுகள் தான் காரணம். அந்த உறவுகளால் தான் கட்சி ஆரம்பித்து இரண்டரை ஆண்டுகளுக்குள் 35 சதவீத வாக்குகள் பெற்று ஜெயிக்க முடிந்தது. ஜெயலலிதாவை, மு.க.ஸ்டாலின் ஆபாசமாக பேசிய வீடியோ இப்போது வரை வைரலாகி வருகிறது. மு.க.ஸ்டாலின் மட்டும் அல்ல, திமுகவில் உயர் பொறுப்பில் உள்ளவர்களும் பெண்களை ஆபாசமாகத்தான் பேசுகிறார்கள். ஜெயலலிதாவை தவறாக பேசிய திமுகவோடு இணைந்து ஆட்சி அமைக்க அதிமுக முயற்சி செய்தபோதே அவர்களது முகமூடி கிழிந்துவிட்டது. முகமூடி கிழிந்தது தெரியாமல் அதிமுக கூவிக் கொண்டிருக்கிறது. மதுராந்தகம் தொகுதி மக்களே இந்த இடைத்தேர்தலில் தவெக சார்பாக உங்கள் சகோதரி, நம்ம வீட்டுப் பெண், என் தங்கச்சி மரகதம் குமரவேல் அவர்களுக்கு விசில் சின்னத்தில் ஓட்டு போடுங்கள்.

திமுகவுக்கும்,மற்றும் பலருக்கும் ஓட்டு போட்டால் பெண்களை தவறாக பேசுபவர்களை ஆதரிப்பதாகவிடும்.மக்கள் தீர்ப்பே, மகேசன் தீர்ப்பு என்று அண்ணா கூறினார். 108 சீட்டு வாங்கிய நாம் ஆட்சி அமைப்பதுநடந்துவிடக்கூடாது என்பதற்காக திமுகவும், மற்றும் பலரும் சேர்ந்து முயற்சி செய்தார்கள்.அதிமுக, பாஜகவின் ஒரு கிளை. ஆனால் இப்போது திமுகவின் ஒரு கிளைக்கழகமாகவே மாறிவிட்டது. அவர்களைப் பொறுத்தவரையில் அனுபவம், அனுபவம்னு சொல்லி மக்கள் காசை கொள்ளையடித்தவர்கள் ஆட்சிக்கு வரலாம். ஆனால், நம்மை போன்று சாமானியர்கள் ஆட்சிக்கு வரக்கூடாது. தவெக ஆட்சிக்கு வந்தால் ஊழல் செய்ய முடியாது. மக்கள் காசை தொட முடியாது. தொட்டால் மாட்டிக் கொள்வார்கள் என்று தெரியும். அதனால் தான் இருவரும் மாறி, மாறி திட்டம் போட்டு கொண்டிருந்தார்கள்.மக்கள் காசை தொடமாட்டோம்.தொடவும் விடமாட்டோம். தொட்டவர்களையும் விடமாட்டோம். சட்டப்பேரவையில் ஊழல் என்று சொன்னாலே திமுகவினர், ஆதாரத்தை காட்டு என்று கூறுவார்கள். என்னை பேசு, பேசு என்பார்கள், ஆனால் நான் பேச எழுந்தால் விடமாட்டார்கள். மக்களை சென்று சேர வேண்டும் என்பதால் சட்டப்பேரவையில் காட்டு கத்து கத்தவேண்டியுள்ளது. தவெக ஆட்சியை கவிழ்ப்பதற்கான திமுகவின் மனக்கணக்கு பலிக்காது. தமிழ்நாட்டு மக்களுக்கும் எனக்குமான கணக்கு பாசக்கணக்கு. உங்கள் சின்னம் விசில் சின்னம். நமது சின்னம் விசில் சின்னம். விசில் சின்னத்துக்கு தான ஓட்டு போடுவீங்க? இவ்வாறு பேசினார்.

# ஜெம் வீரமணி பாலியல் வழக்கு: சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து தமிழக அரசு உத்தரவு



சென்னை: ஜெம் வீரமணி சிறார் பாலியல் வன்கொடுமை வழக்கு குறித்து விசாரணை நடத்தசிறப்புபுலனாய்வுக் குழுவை அமைத்து தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் மகேஷ் குமார் அகர்வால் உத்தரட்டுள்ளார்.

பெருநகர சென்னை காவல்துறையின், மத்திய குற்றப்பிரிவு கூடுதல் காவல் ஆணையர் பி.சி. தேன்மொழி ஐபிஎஸ் தலைமையிலான இக்குழுவில்,பெருநகரகாவல்துறையின் சட்டம் ஒழுங்குஇணைஆணையர் திஷா மிட்டல் ஐபிஎஸ், காவல் கண்காணிப்பாளர் ஜெ முத்தரசி ஐபிஎஸ், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு துணை ஆணையர் வி.வி.கீதாஞ்சலி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த சிறப்பு விசாரணைக் குழுவானது பெருநகர சென்னை காவல் ஆணையரின் மேற்பார்வையில் செயல்படும் என்றும், இதற்குத் தேவையான மனிதவளம் மற்றும் தளவாட வசதிகளை பெருநகரகாவல்ஆதணையர் வழங்குவார் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பின்னணி: மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள சிறுமிகளுக்குப் பணம், செல்போன் உட்பட பல்வேறு உதவிகளைச் செய்து பாலியல் வன்கொடுமை செய்ததாக, ஜெம் கிரானைட்ஸ் தொழில் அதிபர் வீரமணி(84)கைதுசெய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரது உதவியாளர் சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்கனும் சிறையில்அடைக்கப்பட்டுள்ளனர். அதோடு, ஜெம் கிரானைட்ஸ் நிறுவனத்தில் 23 ஆண்டுகள் பணி புரிந்த கணேசன் என்பவரைச் சென்னை பாலியல் தடுப்பு பிரிவு போலீஸார்கைதுசெய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் முதல் கட்ட விசாரணையின் போது, 20 ஆண்டுகளுக்கும்மேலாகசிறுமிகளை குறி வைத்து வீரமணி செயல்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. கடந்த கடந்த 2025 அக்டோபர் 6-ம் தேதிதான் வீரமணியின் பாலியல் அத்துமீறல்கள் தொடர்பாகவீடியோவுடன் புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதற்குமறுநாளேவழக்குப் பதிவு செய்து விட்டதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வழக்குப் பதிவு செய்தாலும், அதன் பிறகு சுமார் 11 மாதங்கள் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை. வீடியோ ஆதாரத்துடன் புகார் அளித்தும் வழக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த காலக்கட்டத்தில் வழக்கைநீர்த்துப்போகச் செய்யும் வேலையில் போலீஸார் ஈடுபட்டுள்ளதாகத் தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தப் பரபரப்பான சூழ் நிலையில், சென்னையில் ஜெம் வீரமணிக்கு சொந்தமான வீடு அலுவலங்களில் நேற்று முன்தினமும், சேலத்தில் நேற்றும் தீவிர சோதனை நடத்தப்பட்டது.கடந்த 2025 அக்டோபர் 6-ம் தேதிதான், வீரமணி குறித்து வீடியோ ஆதாரத்துடன்புகார்வந்ததாகப் போலீஸார் கூறினாலும், 2 ஆண்டுகளுக்கு முன்பே கடந்த 2024-ல் போலீஸில்தான் புகார் அளித்ததாக காங்கிரஸ் நிர்வாகி ரஞ்சன் குமார் நேற்றுமுன்தினம் புதுத் தகவலை வெளியிட்டார். இது பரபரப்பை ஏற்படுத்தியது.

ரஞ்சன் குமார் புகார் தெரிவித்த காலக் கட்டத்தில் சென்னை காவல் ஆணையராக கூடுதல் டிஜிபி-யான அருண் இருந்தார். அவருக்குக் கீழ் தென் சென்னை காவல் கூடுதல் ஆணையராக என்.கண்ணன் இருந்தார். இவர்கள் இருவர் மீதும் புகார்கள் எழுந்ததையடுத்து,இருவரும் காத்திருப்போர் பட்டியலுக்கு உடனடியாக மாற்றப்பட்டுள்ளனர்.

3 போலீஸ் அதிகாரிகளுக்கு சம்மன்: ஜெம் வீரமணிவழக்கில்மிரட்டல் கும்பலுடன் போலீஸார் கைகோத்து செயல்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, கடந்த 2025 அக்டோபரில் சென்னை பாலியல் தடுப்புப் பிரிவில் பணியாற்றிய உதவி ஆணையர் யாஸ்மின், ஆய்வாளர்கள் மகேஷ் குமார், ராஜலட்சுமி ஆகியோர் துறை ரீதியான விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி சென்னை பாலியல் தடுப்புப் பிரிவு போலீஸார் சம்மன் அனுப்பி உள்ளனர்.

# "அரசுப் பள்ளி வளாகங்களிலேயே மாணவிகளுக்கு பாதுகாப்பு இல்லை" எதிர்கட்சி தலைவர் உதயநிதி கண்டனம்



சென்னை: 'அரசுப் பள்ளி உள்ளிட்ட அனைத்துப் பள்ளி வளாகங்களிலும் பிள்ளைகளின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும். தவெக ஆட்சியில் அரசுப் பள்ளி வளாகத்திலேயே மாணவிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெட்கக்கேடு' என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'சிங்கப்பெண் படை எங்கே? பெண்கள் பாதுகாப்பில் அண்ணனாக இருப்பேன், அரணாக இருப்பேன் என்று வாய்கிழிய வசனம் பேசிய முதல்வர் எங்கே?

சென்னை வண்டலூர் அருகே அரசுப் பள்ளி மாணவியை மர்ம நபர்கள் சிலர் பட்டப்பகலில் பள்ளி வளாகத்தில் இருந்தேகடத்திச்சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

பெண்கள் பாதுகாப்பில் சமரசம் இல்லை என்றுசொல்லிக்கொள்ளும் டம்மி முதல்வரின் சர்க்கஸ் ஆட்சியில், அரசுப் பள்ளி வளாகத்திலேயே பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பது வெட்கக்கேடு.

மதுராந்தகம் இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்காக முதல்வர் வருகிறார் என்று சொல்லி, இந்தச் சம்பவத்தை காவல் துறையும், அதிகாரிகளும் மூடி மறைக்க முயற்சி செய்வதும், பாம்புக்கடி என்று மடைமாற்றுவதும், தமிழ்நாடு எவ்வளவு மோசமானவர்கள் கைகளில் சிக்கி இருக்கிறது என்பதைவெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

குற்றவாளிகளைப் பிடிக்க வக்கின்றி பாதிக்கப்பட்ட பெற்றோரின் செல்போன்களை கைப்பற்றி இந்த சம்பவம் குறித்து பொதுவெளியில்பேசக்கூடாது என்று போலீஸ் தரப்பில் மிரட்டல் விடுப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த ரீல்ஸ் ஆட்சியாளர்களின் அராஜகப் போக்கு, குற்றவாளிகளுக்கு கூடுதல் தைரியத்தை அளிப்பதோடு, பாதிக்கப்பட்டவர்களை மேலும் சித்ரவதை செய்வது போல் இருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவிக்கு உரிய சிகிச்சை அளிப்பதோடு, அவருக்குஉரியநீதிகிடைக்க வேண்டும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுப் பள்ளி உள்ளிட்ட அனைத்துப் பள்ளிவளாகங்களிலும் பிள்ளைகளின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும். இடைத்தேர்தல் வருகிறது என்று இந்த கொடுமையை மூடி மறைக்க முயற்சித்தால், மக்கள் இந்த ஆட்சியாளர்கள் முகத்தில் கரியை பூசுவது உறுதி எனத் தெரிவித்துள்ளார்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேவகோட்டை பள்ளியில் மாணவர்களுக்கு பெருந்திரள் வாசிப்பு



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான பெருந்திரள் வாசிப்பு நிகழ்வு நடைபெற்றது.

முதல் பருவத் தேர்வு நேற்றுடன் முடிவடைந்த நிலையில், இன்று பள்ளி நடைபெற்றது.மாணவர்களை நூலகப் புத்தகங்களை வாசிக்க ஊக்குவிக்கும் வகையில், பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமையில் பெருந்திரள் வாசிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்கள் தொடர்ந்து புத்தகங்களை வாசித்து, அதில் இடம்பெற்றுள்ள கருத்துகளை எடுத்துக் கூற வேண்டும் என தலைமையாசிரியர் வலியுறுத்தினார்.இதையடுத்து மாணவர்கள் ஆர்வத்துடன் புத்தகங்களை வாசித்து, தாங்கள் படித்தவற்றின் கருத்துகளையும் பின்னூட்ட ங்களையும் எடுத்துக் கூறினர் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர், சிவரஞ்சனி, ஆர்த்தி, முத்துமீனாள் ஆகியோர் செய்திருந்தனர்.




## கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில்

# மாணவர்களின் திறமை, படைப்பாற்றல் மற்றும் புதுமையான சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையில் 'டெக் ராகா 26' கல்லூரிகளுக்கிடையேயான நிகழ்ச்சி

கோவை அரசூர்பகுதியில் உள்ள கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி அமைந்துள்ளது. இங்கு மாணவர்களின் திறமை, படைப்பாற்றல் மற்றும் புதுமையான சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையில் 'டெக் ராகா 26' கல்லூரிகளுக்கிடையேயான நிகழ்ச்சி

செப்டம்பர் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கேபிஆர் குழுமங்களின் தலைவர் டாக்டர் கே. பி. ராமசாமி கலந்து கொண்டு சிறப்பித்தார். அவர் மாணவியர்கள் மத்தியில் கூறியதாவது.. வரும் காலம் இளைய சமுதாயத்தினரின் கையில் தான் உள்ளது என்றும் உங்கள் உழைப்பை நன்முறையில் பயன்படுத்தி வெற்றி பெற வாழ்த்துகிறேன் என்று வாழ்த்தினார். கல்லூரியின் செயலர் காயத்ரி ஆனந்தகிருஷ்ணன் பல்வேறு கல்லூரி மாணவர்களின் திறமைகளையும் ஒருங்கிணைத்த இந்நிகழ்வின் வெற்றியைப் பெரிதும் பாராட்டினார்.

இந்நிகழ்விற்கு கேபிஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி. கீதா தலைமை தாங்கி மாணவர்கள் மத்தியில் கூறியதாவது..

வெற்றி பெற்றவர்கள் இந்த வெற்றியை அடித்தளமாக்கிக் கொண்டு மேலும் வளரவும் சிறு மதிப்பெண் வித்தியாசத்தில் வெற்றியைத் தவற விட்டவர்கள் தொடர் முயற்சி,வெற்றி என்ற இலக்கை அடையவும் வேண்டுமென வாழ்த்தினார்.

இவ்விழாவில் மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு திறன் போட்டிகளும், தொழில்நுட்பப் போட்டிகளும் நடைபெற்றது. மேலும், நடன நிகர்ச்சி மற்றும் ரீல்ஸ் உள்ளிட்ட கலை மற்றும் படைப்பாற்றல் போட்டிகளும் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும்வகையில்இடம்பெற்றது தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளிலிருந்தும் மாணவ, மாணவிகள் பங்கேற்ற இவ்விழா, மாணவர்களின் தொழில்நுட்ப அறிவு, புதுமை, படைப்பாற்றல் மற்றும் கலைத்திறனை வெளிப்படுத்தும் சிறப்பான தளமாக அமைந்தது. இவ்விழாவில், 60-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் மற்றும் 70-க்கும் மேற்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த 4514 மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு

ரூ 2,50,000 பரிசுத் தொகை வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற்ற 'டெக் ராகா '26 நிகழ்வானது, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களை ஒரே மேடையில் ஒன்றிணைத்து, அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

# கோவையில் பிரியாணி கடையில் கொள்ளை



கோவையில் பிரியாணி கடை பூட்டை உடைத்து ரூ.16 லட்சம் பொருட்கள் திருட்டு? கடை உரிமையாளர் மற்றும் வழக்கறிஞர் உள்ளிட்டோர் மீது நடவடிக்கை கோரி காவல் ஆணையரிடம் புகார்.

கோவை மாவட்டத்தில்,"சிங்கைஸ்டார் பிரியாணி" என்ற பெயரில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பாலமுருகன் என்பவர் கடை நடத்தி வருகிறார் தனது கடையின் பூட்டை உடைத்து சுமார்ரூ.16லட்சம்மதிப்பிலானபொருட்கள் திருடப்பட்டதாக கோவை காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளார். புகார் மனுவில், கடை அமைந்துள்ள இடத்தின் உரிமையாளர் கார்த்திகேயன் என்றும், கடைக்கான முன்பணமாக ரூ.6 லட்சமும், கடையின் உள்கட்டமைப்பு பணிகளுக்காக சுமார் ரூ.16 லட்சமும் செலவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும்,மாதந்தோறும் ரூ.1 லட்சத்து 30 ஆயிரம் வாடகை முறையாக செலுத்தி வந்ததாகவும், கடையை காலி செய்யுமாறு இடத்தின் உரிமையாளர் கார்த்திகேயன் மற்றும் அவரது நண்பரான வழக்கறிஞர் லிங்கேஷ்குமார் உள்ளிட்டோர் தொடர்ந்து மிரட்டி வந்ததாகவும் புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கோவை மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் OS 580/2026 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது வயதான தாயாருக்கு கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதால் கடந்த ஒரு மாதமாக கடைக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்ததாகவும், இன்று காலை சுமார் 10 மணியளவில் கடையைத் திறக்கச் சென்றபோது, கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாகவும் கூறியுள்ளார். மேலும், கடைக்குள் இருந்த சுமார் ரூ.16 லட்சம் மதிப்பிலான பொருட்களை, கார்த்திகேயன், வழக்கறிஞர் லிங்கேஷ்குமார் மற்றும் அடையாளம் தெரியாத சுமார் 15 பேர் சேர்ந்து எடுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றிச் சென்றதாகவும் புகாரில் தெரிவித்துள்ளார்.

எனவே, கடைக்குள் அத்துமீறி நுழைந்து பூட்டை உடைத்து பொருட்களை எடுத்துச் சென்றதாகக் கூறப்படும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து, தனது பொருட்களை மீட்டுத் தர வேண்டும் என கோவை காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

இந்த புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

# கோவையில் கர்நாடக உணவு வகைகள் துவக்கம்

கோவை சாய்பாபா காலனியில் செயல்பட்டு வரும் பிரபல உணவகமான ஸ்ரீ சாய் ருசி, கர்நாடகாவின் பாரம்பரிய 'திண்டி' உணவு வகைகளை கோவை மக்களுக்கு வழங்கி வருகின்றது. தங்களது பயணத்தில் 1,000 நாட்களை நிறைவு செய்துள்ளதாக

இந்நிறுவனத்தின் நிறுவனர் அசோக் பாட்டிஜா, செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார் மேலும் அவர் கூறியதாவது

.. சுமார் மூன்று சகாப்தங்கள் நுகர்வோர் மின்னணு பொருட்கள் துறையில் பணியாற்றிய தான், பெங்களூரின் பாரம்பரிய காலை உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள் மீதான நீண்டகால ஈர்ப்பின் காரணமாக ஸ்ரீ சாய் ருசி எனும் உணவகத்தை உருவாக்கியுள்ளதாகவும், குடும்பத்துடன் பெங்களூருக்கு




தொடர்ந்து சென்று வந்ததன் மூலம் கர்நாடக உணவு வகைகள் மீதான அவரது ஆர்வம் மேலும் வளர்ந்தது. தனது மனைவி காஞ்சன் பாட்டிஜாவின் குடும்பத்தினரும் பெங்களூரில் சுமார் பத்து ஆண்டுகள் உள்ளூர் கேன்டீன் ஒன்றை நடத்தி வந்துள்ளனர். உணவகத்தின் சுவை மற்றும் தரத்தில் தொடர்ந்து ஒரே நிலைத்தன்மை இருப்பதை உறுதி செய்யும் வகையில், தான் தினசரி உணவகத்தை நேரடியாக கவனித்து வருகின்றதாக தெரிவித்தார். பெங்களூரு மசாலா தோசையின் மாவு தயாரிப்பு முதல் தோசை ஊற்றும் முறை, ரவா இட்லியை சரியான நேரத்தில் ஆவியில் வேகவைத்தல், சாம்பாரின் மணம் மற்றும் சுவை என ஒவ்வொரு அம்சத்திலும் அவர் தனிப்பட்ட கவனம் செலுத்தி வருகின்றதாகவும், உணவகத்தின் சமையலறை தரநிலைகளை உருவாக்குவதிலும் காஞ்சன் பாட்டிஜா முக்கிய பங்காற்றியுள்ளார். அவர் நேரடியாக சமையலறையில் பணியாற்றி, உணவு வகைகளுக்கான செய்முறைகளை ஒரே தரத்தில் கொண்டுவர உதவியதுடன், புதிய சமையல் குழுவினருக்கும் பயிற்சி அளித்துள்ளதாக தெரிவித்தார்.

ரவா இட்லி, தாவணகெரேபெண்ணேதோசை, மைசூர் மசாலா தோசை, நீர் தோசை மற்றும் பனீர் சப்ஜியுடன் புல்கா உள்ளிட்ட உணவு வகைகள் ஸ்ரீ சாய் ருசியின் பிரபலமான உணவுகளாக உள்ளதாகவும்,

ஸ்ரீ சாய் ருசி தனது சொந்த தயாரிப்பாக ரவா இட்லி மிக்ஸ்-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தயாரிப்பு அமெரிக்காவில்உள்ளவீடுகளையும் சென்றடைந்து, கர்நாடக பாணி சுவையை சர்வதேச அளவில் கொண்டு சேர்த்து வருகிறதாக தெரிவித்தார்.

# சிறுமிகள் சீரழிப்பு ஜெம் வீரமணி மீதான வழக்கு சி.பி.ஐ. விசாரனை தேவை

## காயல் அப்பாஸ் வலியுறுத்தல்



இளம் வயதுச் சிறுமிகளை பாலியல் ரீதியாகச் சீரழிக்கப்பட்ட குற்றச்சாட்டில் தொழில் அதிபர் ஜெம் வீரமணி கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி முழுமையாக வரவேற்க்கிறது .மேலும் இக் கொடூர சம்பவத்தினால் தமிழக மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தி வருகிறது.

மேலும் இது சம்பந்தமான புகார்கள் எழுந்த அன்றேய காலத்தில் பதவியில் இருந்த அதிகாரிகள், அவற்றைச் சரியாகக் கையாளவில்லை அல்லது வழக்கை மூடிமறைக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், சில அதிகாரிகள் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் காவல்துறை உயர் அதிகாரிகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி தவெக அரசை பாராட்டுகிறது.

மேலும். இந்த சம்பவத்தில் பல அரசியல் கட்சிகளின் முக்கியப் புள்ளிகளுக்கும், சில இடைத்தரகர்களும் ஜெம் வீரமணியின் இக்கொடூரச் செயலுக்கு உடந்தையாக இந்த அனைவர்கள் மீதும் எந்த வித பாகு பாடும் பார்க்காமல் சட்ட ரிதீயான கடும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

எனவே:தொழில் அதிபர் ஜெம்வீரமணியினால் இளம் வயது சிறுமிகள் சிரழிக்க பட்ட வழக்குகளிலிருந்து யாரும் தப்பித்து விடாமல் இருக்க சி பி ஐ விசாரணை நடத்த உடனடியாக நடவடிக்கைகளை மேற்க்கொள்ள வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக த வெ க. அரசை வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயில் சமூக சேவகர் தமிழக வெற்றிக் கழக பிரமுகர் ஆர்.எஸ்.ராஜன் விடுத்துள்ள கோரிக்கை

கன்னியாகுமரி மாவட்த்தின் முக்கிய ரயில் நிலையங்களில் முதன்மையாக உள்ள நாகர்கோயில் ஜங்ஷன் ரயில்வே நிலையத்திற்க்கு உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகள் மற்றும்பொது மக்கள் ஏராளமானோர் தினந்தோறும் வந்து சென்று கொண்டு வருகிறார்கள் .மேலும் மாவட்டத்தின் பல்வேறு ஊர்களுக்கு பொது மக்கள் பேருந்தில் ஏறி செல்வதற்கு வசதியாக ரயில்வே நிர்வாகத்தால் தற்போது அங்கு ஒரு பேருந்து நிறுத்தம் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன் பாட்டில் உள்ளது.



ஆனால் இந்த பேருந்து நிறுத்தம் ரயில்வே முகப்பில் இருந்து தள்ளி அமைக்க பட்டுள்ளதாலும் அந்த பகுதியில் மின் கோபுரம் அமைக்கபடாத காரணத்தாலும் இரவு நேரங்களில் அந்த பகுதியில் மின் விளக்கு இல்லாத காரணத்தால் இருட்டாக உள்ளது. எனவே பொது மக்கள் அங்கு பேருந்துக்காக ஒருவித அச்ச உணர்வில் தான் பேருந்துக்காக காத்து நிற்க்க வேண்டி உள்ளது. எனவே ரயில்வே நிர்வாகம் பொது மக்கள்பயணிகள் அச்சத்தை போக்கும் விதமாக உடனடியாக துரித நடவடிக்கை எடுத்து அந்த பேருந்து நிறுத்தம் அருகில் உயர்மின் கோபுரம் ஒன்று அமைக்கவேண்டும் என பொது மக்கள் நலன் கருதி ரயில்வே நிர்வாகத்தை கேட்டு கொண்டார்.

## தச்சு தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு

# தேனியில் ஆக்சன் டெசா சார்பில் தச்சர்கள் கௌரவிப்பு



தேனியில் ஆக்சன் டெசா சார்பில் தச்சு தொழிலாளர்கள் தினம் ஏபிஎம் ஹோட்டலில் ஆக்சன் டெசா நிறுவனத்தின் கிளை மேலாளர் விஎஸ்ஜெயன், தமிழ்நாடு மேலாளர் ஆறுமுகம் தலைமையிலும்,தேனிமாவட்ட விற்பனையாளர் தேனி பிளைவுட் உரிமையாளர் ராஜசேகர் ,விஜய்பாபு முன்னிலையில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து ஆக்சன் டெசாவின் மேலாண்மை இயக்குனர் விஜய் அகர்வால் காணொலி காட்சி மூலம் சிறப்பாக கலைநயத்துடன் வடிவமைக்கும் தச்சு தொழிலாளர்களை பாராட்டி உரையாற்றினார். பின்னர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி டெசா சலாம் வைத்து பரிசு பொருட்கள் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டனர். இந்நிகழ்ச்சியில் சுமார் 200-க்கும் மேற்பட்ட தச்சு தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். மேலும் ஆக்சன் டெசா நிறுவன அலுவலர்கள் கோவை கோகுல்நாத், திருச்சி ரியாஸ்தீன், தேனி தமிழரசன்,சேலம் பூபதி, திருநெல்வேலி முகமதுயாசின், புளோரிங் டிவிசன் பிரதீப் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக ஆக்சன் டெசா நவீன சிறந்த தயாரிப்பான எம்டிஎப், மற்றும் எச்டிஎச்ஆர் பாய்லோ போர்டுகள் ,காட்சிபடுத்தபட்டிருந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தச்சு கலைஞர்களுக்கு கூப்பன் வழங்கப்பட்டு குலுக்கல் முறையில் பத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



தமிழ்நாடு முழுவதும் நியாயவிலைக் கடைகளில் கைவிரல் ரேகை பதிவு/கண் கருவிழி சரிபார்ப்பு (eKYC) மேற்கொள்ளாத அனைத்து குடும்ப அட்டை பயனாளிகளுக்கு e-KYC பதிவினை 100% நிறைவு செய்யும்பொருட்டு 26.09.2026 அன்று சிறப்பு முகாம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.தமிழ்நாடு முழுவதும் நியாயவிலைக் கடைகளில் கைவிரல் ரேகை பதிவு/கண் கருவிழி சரிபார்ப்பு (eKYC) மேற்கொள்ளாத குடும்ப அட்டை பயனாளிகளுக்கும் 02.08.2026,08.08.2026,09.08.2026,29.08.2026 மற்றும் 19.09.2026 ஆகிய நாள்களில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் விற்பனை முனைய இயந்திரம் மூலமாக விரல் ரேகை/கண் கருவிழி சரிபார்ப்பின் மூலம் e-KYC பணி மேற்கொள்ளப்பட்டும், e-KYC பதிவினை 100% நிறைவு செய்யப்படாமல் உள்ளது.எனவே, ஈரோடு மாவட்டத்தில் eKYC பதிவினை 100% நிறைவு செய்யும் பொருட்டு 26.09.2026 அன்று அனைத்து நியாயவிலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் நடத்தப்படவுள்ளதால் மேற்படி, சிறப்பு முகாமில் கைவிரல் ரேகை பதிவை மேற்கொள்ளாத PHH-AAY,PHH&NPHH குடும்ப அட்டைதாரர்கள் கைவிரல் ரேகை (eKYC) பதிவு செய்து பயனடையுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.



தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் இரண்டாம் பராக்கிரம பாண்டியன் என்று முடி சூட்டப்பட்ட பத்மஸ்ரீ டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் அவர்களுடைய 91 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் அருள்மிகு காசி விசுவநாதர் திருக்கோவிலில் பத்மஸ்ரீ டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் அவர்களின் பெயரில் பூஜைகளும் இங்கு வருகை தந்த பக்தர்களுக்கு இனிப்புகளும் இதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது இந்தனை தொடர்ந்து இரண்டாம் பராக்கிரம பாண்டியன் டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் அவர்களுடைய திருவுருவப்படத்திற்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் பக்தர்கள் மாலை அணிவித்து மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தினார்கள் இந்த நிகழ்வில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவன தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் அன்னதானத்தை தொடங்கி வைத்து பேசினார் அப்போது தென்காசி காசி விசுவநாதர் திருக்கோவிலுக்கு இந்தியா முழுவதும் இருந்து பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் வருகை தருகின்றார்கள் பக்தர்கள் பணம் எடுப்பதற்கு வசதியாக அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவிலுக்கு முன்பு ஏடிஎம் இயந்திரம் வைக்கவேண்டும் என்றும் தென்காசி புதிய பேருந்துநிலையத்திற்கு பத்மஸ்ரீ டாக்டர் சிவந்தி ஆதித்தனார் பெயரை சூட்ட வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள் இந்த நிகழ்வில் பொதுச் செயலாளர் கொண்டாகுளம் கணேசன் பொருளாளர் சுப்பிரமணியன் மாநில கல்வி குழு தலைவர் ஜான் டேவிட் மாநில கல்விகுழு துணை செயலாளர் பாலசுப்பிரமணியன் தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார் மத்திய மாவட்ட பாலமுருகன் குமார் கிருஷ்ணமூர்த்தி சுசீந்திரன் மாயகிருஷ்ணன் ரோஸ் முருகன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### காட்டுமன்னார்கோவிலில் பரபரப்பு:

## ஒரே வீட்டில் முதிய தம்பதி மரணம்; போலீசார் விசாரணை



காட்டுமன்னார்கோவில் பேரூராட்சிக்கு உட்பட்ட காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் நடேசன் மகன் லோகநாதன் (88). இவரது மனைவி கஸ்தூரி (78). இவர்களுக்கு சரவணன் (58) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். மகளுக்கு திருமணமாகி கள்ளக்குறிச்சியில் வசித்து வருகிறார். லோகநாதன், கஸ்தூரி ஆகிய இருவரும் உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு வந்ததாகவும், இதற்காக பல ஆண்டுகளாக மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும், தங்களை மகன் சரிவர கவனிப்பதில்லை என்று தம்பதியினர் கூறி வந்ததாகவும் தெரிகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை சரவணனின் மனைவி லதா, வீட்டில் இருந்த லோகநாதன் மற்றும் கஸ்தூரியை எழுப்பியுள்ளார். அப்போது இருவரும் எழுந்திருக்காமல் மயங்கிய நிலையில் இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து லதா, தனது கணவர் சரவணனுக்கு தகவல் தெரிவித்துள்ளார். உடனடியாக வீட்டுக்கு வந்த சரவணன், அக்கம் பக்கத்தினர் உதவியுடன் இருவரையும் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், மேல் சிகிச்சைக்காக சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இருவரும் அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவரும் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து தகவலறிந்த காட்டுமன்னார்கோவில் போலீசார் இருவரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

அப்போது பிரேத பரிசோதனையில் இருவரும் அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரை சாப்பிட்டதாக தெரியவந்தது, இதனையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதிய தம்பதி ஒரே நேரத்தில் அதிக அளவில் தூக்க மாத்திரை சாப்பிட்டு மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு, பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மேலும் இருவரும் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது வேறு ஏதேனும் காரணமா குறித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மண்டலம்–3, வார்டு எண்–10, வில்லரசம்பட்டி பகுதியில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, சுகாதார நிலையத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகள், நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள், மருந்துகளின் இருப்பு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுற்றுப்புறத் தூய்மை, பராமரிப்பு பணிகள் உள்ளிட்ட பணிகள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது செயற்பொறியாளர் ஆனந்தன் அவர்கள் உள்ளிட்ட பொறியாளர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின்,மண்டலம்–3, வார்டு எண்–19க்குட்பட்ட வீரப்பம்பாளையம் தொடக்கப்பள்ளியில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, பள்ளியில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகள், புதிதாக கட்டப்பட்டு வரும் சமையல் கூடம் ஆகியவற்றை பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம் மற்றும் தரம் குறித்து கேட்டறிந்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கல்வி மற்றும் பள்ளியில் வழங்கப்படும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.உடன் செயற்பொறியாளர் ஆனந்தன் உள்ளிட்ட மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாரின் 91வது பிறந்தநாள்:

## திருச்செந்தூர் மணிமண்டபத்தில் பெருந்தலைவர் மக்கள் கட்சி மாநில வழக்கறிஞர் அணி தலைவர் வக்கீல் ஜெயச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனாரின் 91–வது பிறந்த நாளை முன்னிட்டு, திருச்செந்தூரில் உள்ள சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தில் பெருந்தலைவர் மக்கள் கட்சி சார்பில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பெருந்தலைவர் மக்கள் கட்சியின் மாநில வழக்கறிஞர் அணி தலைவர் வக்கீல் ஜெயச்சந்திரன் தலைமை வகித்து, பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, மணிமண்டபத்தில் தினத்தந்தி குழுமத் தலைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆதித்தனாருக்கு சால்வை அணிவித்து, நிர்வாகிகள் வாழ்த்து பெற்றனர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட தமிழ்நாடு நாடார் பேரவை தலைவர் துளசி மணி மார்பழகன், பெருந்தலைவர் மக்கள் கட்சி தூத்துக்குடி மத்திய மாவட்ட தலைவர் பொன் ரத்தினம், மத்திய மாவட்ட செயலாளர் மரிய அந்தோணி வளன், தமிழ்நாடு நாடார் பேரவை தூத்துக்குடி மத்திய மாவட்ட தலைவர் கணேசன், பெருந்தலைவர் மக்கள் கட்சி மாநில மாணவர் அணி தலைவர் மணிகண்டன், தமிழ்நாடு நாடார் பேரவை ஆறுமுகநேரி நகர தலைவர் ஜோதிலிங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளில் திமுக வேட்பாளர் பரந்தாமன் தீவிர வாக்கு சேகரிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் பேரூராட்சி 15 வார்டுகளில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மதுராந்தகம் தொகுதி திமுக வேட்பாளர் பரந்தாமன் தீவிரவாக்கு சேகர் பில் ஈடுபட்டார். அப்பொழுது அவருக்கு பொதுமக்கள் மாலை அணிவித்தும் மலர் தூவியம் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பளித்தனர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம், பாராளுமன்ற உறுப்பினர் கிரிராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களிடம் பேசிய திமுக வேட்பாளர் பரந்தாமன் அவர்கள் நான்கு மாத த. வெ. க ஆட்சியில் மக்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டு உள்ளார்கள் என்பதை விளக்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின்,மண்டலம்–3, வார்டு எண்–19க்குட்பட்ட போஸ்டல் நகர் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் மற்றும் தரை பாலம் அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வின்போது, மழைநீர் சீராக செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடிகால் அமைக்கும் பணிகள், சாலை அமைக்கும் பணிகளின் தரம் மற்றும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். உடன் செயற்பொறியாளர் ஆனந்தன் உள்ளிட்ட மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சமூக நீதிக்காக பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது



சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது பெறுவோருக்கு ரூ5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) விருது தொகையும் ஒரு சவரன் தங்கப்பதக்கமும் தகுதியுரையும் வழங்கப்படுகிறது. இவ்விருதாளர் முதலமைச்சர் அவர்களால் தேர்வுசெய்யப்படுகிறார். 2026 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" வழங்குவதற்கு உரிய விருதாளரை தேர்தெடுக்க பரிந்துரைகள் வரவேற்க்க ப்படுகிறது. எனவே, சமூக நீதிக்காக பாடுபட்டு பொது மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்திட மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதன் பொருட்டு எய்திய சாதனைகள் ஆகிய தகுதிகள் உடையவர்கள் தங்களது விண்ணப்பத்தினை ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம்.

தங்களது விண்ணப்பம்,சுயவிவரம், முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் சமூகநீதிக்காக பாடுபட்ட பணிகள் குறித்த விவரம் மற்றும் ஆவணங்கள் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். இது குறித்த கூடுதல் விவரங்கள் அறிய வேண்டுவோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய கட்டிடத்தில் 4ம் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

2026 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதிற்கான விண்ணப்பங்கள் விவரம் முழு முகவரியுடன் 20.10.2026 – க்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய கட்டிடத்தில் 4ம் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், ஈரோடு என்ற முகவரிக்கு விண்ணப்பி க்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# இளையராஜாவின் 50 ஆண்டுகால இசைப்பயணம்: ஈரோட்டில் பிரம்மாண்ட நேரடி இன்னிசை நிகழ்ச்சி - இசைஞானி இளையராஜா டிக்கெட் வெளியிட்டார்




இசைஞானி இளையராஜாவின் 50 ஆண்டுகால பொன்னான இசைப்பயணத்தைக் கொண்டாடும் வகையில், ஈரோடு கங்காபுரத்தில் உள்ள 'டெக்ஸ் வேலி' வளாகத்தில் வரும் அக்டோபர் 25-ஆம் தேதி பிரம்மாண்டமான நேரடி இன்னிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அருண் ஈவென்ட்ஸ் மற்றும் மெர்குரி நிறுவனங்கள் இணைந்து நடத்தும் இந்நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டை (டிக்கெட்) சென்னையில் உள்ள தனது கோடம்பாக்கம் ஸ்டுடியோவில் இசைஞானி இளையராஜா முறைப்படி வெளியிட்டார். இதன் முதல் டிக்கெட்டை மில்கி மிஸ்ட் டெய்ரி ஃபுட்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சதீஷ்குமார் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின் போது அருண் ஈவென்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அருண் உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் உடனிருந்தனர்.

'ஜெயிலர்', 'டாக்டர்', 'பீஸ்ட்', 'விடுதலை' உள்ளிட்ட வெற்றித்திரைப்படங்களுக்கு பிரம்மாண்ட அரங்குகளை வடிவமைத்த பிரபல கலை இயக்குநர் கிரண் இந்நிகழ்ச்சிக்கான மேடை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறார். நவீன தொழில்நுட்பத் தரம், கண்கவர் ஒளி-ஒலி அமைப்புகள் மற்றும் சிறப்பு மேடை வடிவமைப்புடன் ரசிகர்களுக்கு மறக்க முடியாத இசை விருந்தாக இந்நிகழ்வு அமையவுள்ளது. இதில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், தொழிலதிபர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கின்றனர்.

இம்மாபெரும் நேரடி இன்னிசை நிகழ்ச்சிக்கான இணையவழிடிக்கெட் முன்பதிவு தற்போது இணையதளத்தில் தொடங்கி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. டிக்கெட்டுகளின் விலை ரூ. 500 முதல் ரூ. 50,000 வரை பல பிரிவுகளில் நிர்ணயிக்கப்பட்டு, ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் மண்டலம் 3, வார்டு எண் 10, வில்லரசம்பட்டி ரவுண்டானா பகுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நகரின் பசுமையை மேம்படுத்தும் வகையில் செடிகள் மற்றும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை ஆய்வு மேற்கொண்டார்.உடன் நகரத் திட்டமடுநர் மதியழகன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மண்டலம்–3, வார்டு எண்–10க்குட்பட்ட வில்லரசம்பட்டி பெரியகாடு பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.ஆய்வின்போது, மழைநீர் சீராக செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடிகால் அமைக்கும் பணிகள், சாலை அமைக்கும் பணிகளின் தரம் மற்றும் பணிகளின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.உடன் செயற்பொறியாளர் ஆனந்தன் அவர்கள் உள்ளிட்ட மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மண்டலம்–3, வார்டு எண்–19க்குட்பட்ட வீரப்பம்பாளையம் அங்கன்வாடி மையத்தில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, அங்கன்வாடி மையத்தில் பயிலும் குழந்தைகளின் எடை மற்றும் உடல் வளர்ச்சி நிலை குறித்து கேட்டறிந்தார். மேலும், குழந்தைகளுக்கு வழங்கப்படும் சத்துணவின் தரம், உணவு தயாரிக்கப்படும் சமையல் கூடத்தின் தூய்மை மற்றும் குழந்தைகளுக்கு முறையாக உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார்.உடன் செயற்பொறியாளர் ஆனந்தன் அவர்கள் உள்ளிட்ட மாநகராட்சி பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம், கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக சுற்றுலா தினம் 2026 யை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (25.09.2026) வழங்கினார்.

# ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் ஒய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் ஒய்வூதியதாரர்கள் குறைதீ ர்க்கும் கூட்டம் நேற்று (25.09.2026) நடைபெற்றது. ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு அரசுத்துறை அலுவலகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களின் ஓய்வூதியப் பலன்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவதில் ஏதேனும் குறைகள் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், நேற்று (25.09.2026) நடைபெற்ற ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஓய்வூதியதாரர்களிடமிருந்து, ஓய்வூதியம், ஊதிய நிர்ணயம், நிலுவை த்தொகை,பொது சேமநல நிதி உள்ளிட்டவை தொர்பான 50 மனுக்களை பெற்றுக்கொண்டு உரிய அலுவலர்களிடம் வழங்கினார். ஓய்வூதியதாரர் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுவதாக அறிவித்த நாளிலிருந்து மருத்துவக்காப்பீட்டில் மருத்துவ செலவுகளை திரும்பப் பெறுதல், பணப்பலன்கள் நிலுவை,குடும்ப நல நிதி, திருத்திய பணக்கொடை வழங்குதல், ஓய்வூதிய பணப்பலன்கள் உள்ளிட்டவை தொடர்பான மனுக்கள் வரப்பெற்றதில் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) சுரேஷ், மாவட்ட கருவூல அலுவலர் சிவ. சரவணன், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள், ஓய்வூதிய சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# BrahMos, AK203 made in UP giving Pakistan ‘sleepless nights’: Amit Shah in Greater Noida

The BrahMos missiles being manufactured in Uttar Pradesh were giving Pakistan "sleepless nights", home minister Amit Shah said on Friday in state's Greater Noida. He spotlighted the state's growing defence manufacturing capabilities and investment climate.

At the inauguration of the fourth edition of the UP International Trade Show (UPITS) at the India Expo Centre and Mart in Greater Noida, Shah said investments were flowing into all six nodes of the Uttar Pradesh Defence Industrial Corridor -- Jhansi, Chitrakoot, Lucknow, Agra, Aligarh and Kanpur.



"Today, the BrahMos missiles manufactured in UP give Pakistan sleepless nights; this is a prime indicator of the transformation taking place," Shah said, referring to the BrahMos facility in Lucknow.

He also cited the AK-203 assault rifles manufactured in Amethi as an example of the expansion of defence production in the state. "Similarly, the AK-203 assault rifles made in Amethi are giving sleepless nights to Naxalites and terrorists alike," he said.

The BrahMos Integration and Testing Facility Centre in Lucknow was inaugurated in May 2025 as part of the UP Defence Industrial Corridor. The facility undertakes the assembly, integration and testing of the supersonic cruise missile. The first batch of BrahMos missiles manufactured there was flagged off in October 2025.

The facility was set up with an investment of around 300 crore across about 200 acres, with the aim of strengthening indigenous defence manufacturing and developing an ecosystem of ancillary industries and skilled employment.

'India sustained growth despite global challenges'

Shah said India strengthened its economy despite global upheavals, crediting the Modi government's economic and trade policies for expanding export opportunities.

"Those with a jaundiced view cannot bear to see India's progress," he said, adding that India had signed Free Trade Agreements (FTAs) with several countries under Prime Minister Narendra Modi.

"These agreements have exponentially boosted our industries' export potential, and we have sustained our growth despite facing various adversities," Shah said. He said the investments coming into the Defence Industrial Corridor were helping develop defence products not only in Uttar Pradesh but across the country. Shah also spoke of the One District, One Product (ODOP) initiative, saying it was creating employment opportunities for Uttar Pradesh's youth. He said young people earlier had to leave the state in search of jobs, while the growth of local industries was providing more opportunities closer to home.

Shah said Uttar Pradesh had undergone a major change in its law-and-order situation since the BJP came to power in 2017.

"There was a time when the mafia ruled UP. In 2017, the BJP formed the government here, with Yogi Adityanath assuming the role of CM. The Yogi government has successfully eliminated the mafia across the state, and this has created a conducive atmosphere for investment," he said.

He also attributed India's policy continuity to political stability under Modi. "Political stability has become a hallmark of our leader, PM Modi. By earning the public's trust over 3 consecutive terms as Prime Minister, he has not only formulated policies but also ensured their consistent implementation on the ground," Shah said.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.